
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**830**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## `கத்தரி வெயில்' கட்டுக்கதைக்கு முற்றுப்புள்ளி!

**க**ல்வி நிலையங்களில் அறிவியல் மனப்பான்மையைத்தான் வளர்க்க வேண்டுமே தவிர, மூட நம்பிக்கைகளைத் திணிக்கக்கூடாது என்று 'மாநில சுயாட்சி நாயகருக்கு மகத்தான பாராட்டு விழா' நிகழ்ச்சியில், முதலமைச்சர் கூறினார். கல்விக்கூடங்களில் மட்டுமல்ல, திராவிட மாடல் அரசு அமைந்த பிறகுதான், சமூகத்தில் நிலவும் மூடநம்பிக்கைகளைக் களையும் முயற்சிகளும் வேகமெடுத்து இருக்கின்றன.

ஆண்டாண்டு காலமாக கோடை காலத்தில், 'கத்தரி வெயில்' அல்லது 'அக்னி நட்சத்திரம்' என்று குறிப்பிட்ட நாட்கள் சொல்லப்பட்டு வந்தன. இந்த ஆண்டு மே 4 முதல் 28 வரை 'அக்னி நட்சத்திரம்' என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. அந்த நாட்களில் வெயில் மிக அதிகமாக இருக்கும் என்றும் செய்திகளில் கூறப்பட்டன. ஒவ்வொரு ஆண்டும் இதைச் செய்தியாக வெளியிடுவதை, ஊடகங்கள் வாடிக்கையாகக் கொண்டுள்ளன.

ஆனால், இந்தக் கத்தரி வெயில் அறிவியல்பூர்வமானது அல்ல என்று, 'தமிழ்நாடு அரசின் உண்மை சரிபார்ப்பகம்' தெரிவித்துள்ளது. "பொதுவாகவே மே மாதம் கோடைக்காலம் என்பதால், வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும். வானிலை ஆய்வு மையம் இதுதொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்புகளை வெளியிடும்" என்று தெளிவுபடுத்தியுள்ளது.

மேலும், இதுதொடர்பாக விளக்கம் அளித்துள்ள சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் அமுதா, "கத்தரி வெயில் என்பது அந்தக் காலத்தில் இருந்து பஞ்சாங்கத்தின் அடிப்படையில் நம்பப்படுகிற ஒன்று; அது அறிவியல்பூர்வமானது அல்ல. இது குறித்து, இந்திய வானிலை மையம் எந்த அறிவிப்பையும் வெளியிடாது" என்று கூறியுள்ளார்.

லக்னத்திற்கு இரண்டாவது மற்றும் 12-வது இடத்தில் ராகு, கேது, சனி, செவ்வாய் இருந்தால், அதற்கு கத்திரி தோஷம் என்று பஞ்சாங்கம் சொல்கிறது. அந்தக் காலத்தைத்தான் 'கத்திரி தோஷக் காலம்' என்று கூறி வந்தனர். அந்த மூடநம்பிக்கையை முறியடித்து, அறிவியல்படி அப்படி ஒன்று இல்லை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது தமிழ்நாடு அரசு.

## ஃப்ளாஷ்பேக்





ஈரோடு இறைவன்

### தலைவர் மகிழ்ந்து, உரையாடிய நேரம்!

2015-ஆம் ஆண்டு என் மகன் இ.சு.யாழினியன் பிறந்தநாள் அன்று, முத்தமிழறிஞர் கலைஞரை சந்தித்து வாழ்த்துப் பெற்றோம். உடன் என் மற்றொரு மகன் இ.சு.பகலவன் மற்றும் தலைமைக் கழகப் பேச்சாளர் என் தம்பி பொன்னேரி சிவா. எங்களுடன் தலைவர் மகிழ்ச்சியாக உரையாடிய அந்த நேரம், என் மனதில் பொதிந்து வைத்துள்ள மாணிக்கமாக மிளிரும்.

**- ஈரோடு இறைவன்,**
**தலைமைக் கழகச் சொற்பொழிவாளர்,**
**இணைச் செயலாளர், கழக இலக்கிய அணி**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### வெளிமாநில தேர்தலில் கழக வேட்பாளர்!

இந்திய விடுதலைக்குப் பின், 1957-ஆம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலில் தி.மு.கழகம் நேரடியாகப் பங்குபெற்றது. கர்நாடக மாநிலம், கோலார் தங்கவயல் தொகுதி, பெங்களூர் பிராட்வே தொகுதி என வெளிமாநிலத்தில் வேட்பாளர்களை நிறுத்தினார் பேரறிஞர் அண்ணா.

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்!

**தமிழ்.கா.அமுதரசன்**

**3**

### கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!

*த*மிழ்நாட்டின் கடந்த 25 ஆண்டு கால அரசியல் வரலாற்றில் பல கிளைக் கதைகளை உருவாக்கிய வழக்கு என்றால், அதில் முதன்மையானது அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு சிறுதொழில் கழகத்தின் (டான்சி) நிலத்தை, முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா தனக்குத் தானே எழுதி எடுத்துக் கொண்ட வழக்கு. திரைப்படங்களில் மாற்று நடிகர்களைப் போல, அரசியலில் தனக்கென டூப் உருவாக்கி, அந்த டூப்பை முதலமைச்சராக்கி, தமிழ்நாட்டின் பண்பாட்டினையே கேலிக்கூத்தாக்கிய பல சம்பவங்களைக் கொண்டது டான்சி வழக்கு.

#### வழக்கின் பின்னணி

1991 - 1996 ஆண்டுகளுக்கிடையிலான ஜெயலலிதா ஆட்சிக்காலம், 'முறைகேடுகளின் பொற்காலம்' எனலாம். அடாவடிகளும் ஊழலும் அந்த ஆட்சியின் அவலங்களாக நீடித்தன.

ஜெயலலிதாவுடன் அவரது தோழியாக இருந்த சசிகலா, ஆகிய இருவரும் சேர்ந்து 'ஜெயா பப்ளிகேஷன் மற்றும் சசி எண்டர் பிரைசஸ்' என்கிற நிறுவனங்கள் வழியாக, டான்சி நிலத்தை வாங்கினர். அதாவது அடிமாட்டு விலைக்குத் தனக்குத் தானே பத்திரப்பதிவு செய்து கொண்டார் ஜெயலலிதா. பத்திரப் பதிவிலும் பல முறைகேடுகள் செய்து அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்தினார். அன்றைய மதிப்பில், அரசுக்கு 4.16 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுத்தினார்கள்.

டான்சி நில ஊழல் மற்றும் ஆட்சியின் பல்வேறு அடாவடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கோரி, ஆளுநர் பீஷ்ம நாராயண் சிங்கிடம் மனு அளித்தது கழகம். அவர் மறுத்த நிலையில், தாங்கள் அளித்த மனுவை ஏற்குமாறு, ஆளுநர் பீஷ்ம நாராயண் சிங்கிற்கு உத்தரவிடக்கோரி, 1993-ஆம் ஆண்டில் சென்னை உயர் நீதிமன்ற படியேறியது கழகத்தின் வழக்கறிஞர் அணி.

அன்றைக்கு கழகத்தின் சட்டப் பிரிவுச் செயலாளராக இருந்த, இன்றைய கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பெயரில், வழக்கறிஞர் சண்முகசுந்தரம் டான்சி நிலம் விற்பனை தொடர்பாக, அந்த வழக்கினைத் தாக்கல் செய்தார். இதற்கிடையில், அரசியல் மேடைகளில் பேசிய ஜெயலலிதா, அந்த வழக்கு தொடர்பாக பேசுகையில், "ஆம், டான்சி நிலத்தை வாங்கினேன்" என ஆணவத்துடன் பேச, அந்தப் பேச்சை வைத்தே நீதிமன்றத்துக்கு அழுத்தம் கொடுத்தனர் கழக வழக்கறிஞர்கள்.

இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதால், கழகத்தின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இதற்கிடையே சுப்பிரமணியன் சுவாமியும் ஜெயலலிதா மீது வழக்குத்தொடர அனுமதிகோரி, உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். அவரது மனுவுடன் சேர்த்து, கழகத்தின் மனுவை உச்ச நீதிமன்றம் விசாரிக்க முடிவு செய்தது. ஆணவத்தின் தலையில் சம்மட்டி அடி அடித்தது.

#### தாக்கப்பட்ட சண்முகசுந்தரம்

நீதிமன்றம் சம்மன் அனுப்பிய சூழலில், ஒரு நாள் இரவு நேரத்தில் வழக்கறிஞர் சண்முகசுந்தரம் அடையாளம் தெரியாத குண்டர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டார். குற்றுயிரும் குலை உயிருமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். "தாக்குதலுக்குக் காரணம் ஜெயலலிதாதான்" என கலைஞர் நேரடியாகக் குற்றம்சாட்டினார்.

ஜெயலலிதாவுக்கு எதிராக தமிழ்நாடு முழுவதும் வழக்கறிஞர்கள் போராட்டத்தில் குதித்தனர். நீதிமன்றங்கள் முடங்கின.


இந்த நிலையில், டான்சி நில விற்பனை தொடர்பாக விசாரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டும், விசாரணை நகரவில்லை. 1995-ஆம் ஆண்டு ஆட்சிமாற்றம் ஏற்பட்டு, கழக ஆட்சி அமைந்தது. அ.தி.மு.க. ஆட்சியில் நடந்த ஊழல்களை விசாரிப்பதற்காக, மூன்று தனி நீதிமன்றங்களை அமைத்தார் முதலமைச்சர் கலைஞர்.

டான்சி வழக்கை இரண்டாகப் பிரித்து ஜெயா பப்ளிகேஷன்ஸ் மீது ஒரு வழக்கும், சசி எண்டர்பிரைசஸ் மீது மற்றொரு

டான்சி நிலத்தை நான்தான் வாங்கினேன் என்கிற குறிப்புகளுடன் நீதிமன்றத்தில் அழுத்தமாக வாதங்களை வைத்தது கழக அணி.

மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், 'டான்சி ஊழல் வழக்கிலிருந்து ஜெயலலிதாவை விடுவித்தது தவறு. அவரை மீண்டும் டான்சி வழக்கில் சேர்த்து, தனி நீதிமன்றம் விசாரிக்க வேண்டும்' என்று உத்தரவிட்டது.

தனி நீதிமன்ற நீதிபதி அன்பழகன் டான்சி வழக்கை விசாரித்தார். அரசுத் தரப்பில் 50 பேரும் ஜெயலலிதா தரப்பில், 12 பேரும் சாட்சியம் அளித்தனர். 'டான்சி நிலம் வாங்கியது தொடர்பாக எனக்கு எதுவும்


ஓவியம் : ரவி பேலட்

வழக்கும் தொடரப்பட்டன. இந்திய தண்டனைச் சட்டம்-120-பி (குற்றச்சதி), 409 நம்பிக்கை மோசடி, ஊழல் தடுப்புச் சட்டம் 13 (1) உடன் 13 (1சி) ஆகிய பிரிவுகளின் கீழ் இரண்டு வழக்குகளும் தொடரப்பட்டன.

ஜெயலலிதா, சசிகலா, முன்னாள் அமைச்சர் முகம்மது ஆசிப், முதல்வராக ஜெயலலிதா இருந்தபோது அவரது இணைச் செயலாளராக இருந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி கற்பூர சுந்தரபாண்டியன், டான்சி முன்னாள் தலைவர் டி.ஆர்.சீனிவாசன், சிறப்பு ஆட்சியர் நாகராஜன் ஆகியோர் மீது சி.பி.சி.ஐ.டி. போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கைச் சென்னை 3-வது தனி நீதிமன்றம் விசாரித்தது.

வழக்கிலிருந்து தன்னை விடுவிக்க வேண்டும் என்று சொல்லி, சென்னை உயர் நீதிமன்றத்தில் ஜெயலலிதா மனுத்தாக்கல் செய்தார். இதனை விசாரித்த நீதிபதி தங்கராஜ், ஜெயலலிதாவை டான்சி வழக்கிலிருந்து விடுவித்தார்.

சென்னை, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து தி.மு. கழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தது. அவர் ஏற்கெனவே மேடையில் பேசிய ஆணவப் பேச்சான,

> **ஜெயலலிதாவின் அரசியல் வாழ்க்கைக்கு, ஆணவத்துக்கு விழுந்த முதல் அடி டான்சி வழக்கு!**

தெரியாது. பத்திரத்தில் நான் கையெழுத்துப் போடவில்லை. போலி கையெழுத்து போடப்பட்டுள்ளது' என நீதிமன்றத்தில் ஆஜராகி பொய்யான வாக்குமூலம் அளித்தார் ஜெயலலிதா. இறுதி விசாரணை, வாதங்கள் எல்லாம் முடிந்து, 2000-வது ஆண்டு அக்டோபர் 9-ஆம் தேதி தீர்ப்பு அளிக்கப்பட்டது. கழகம் தொடர்ந்த வழக்கு ஜெயலலிதாவின் அரசியல் வாழ்க்கையில் மிகப் பெரிய இடியாக இறங்கியது.

#### ஜெயலலிதா குற்றவாளியானார்

ஜெயலலிதாவின் ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனம் டான்சி நிலத்தை அதன் மதிப்பை விடக் குறைவாக வாங்கிய குற்றத்திற்காக ஜெயலலிதா, சசிகலா, முகமது ஆசிப், டி.ஆர்.சீனிவாசன், நாகராஜன், ஐ.ஏ.எஸ். அதிகாரி கற்பூர சுந்தரபாண்டியன் ஆகிய 6 பேருக்கு தலா 3 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் தலா 10 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தது நீதிமன்றம்.

சசி எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்காக டான்சி நிலத்தை வாங்கிய குற்றத்திற்காக ஜெயலலிதா, சசிகலா, டி.ஆர்.சீனிவாசன், நாகராஜன், கற்பூரசுந்தரபாண்டியன் ஆகிய 5 பேருக்கும் தலா 2 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் தலா 5 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின்முன் குற்றவாளியாக நின்றார் ஜெயலலிதா. அவர் அடுத்த தேர்தலில் நிற்க முடியாது என்கிற நிலை உருவானது.

ஜெயலலிதாவுக்குத் தண்டனை விதிக்கப்பட்டதால், சாலை மறியல், தீ வைப்பு போன்ற அராஜக சம்பவங்களில் ஈடுபட்டனர் அ.தி.மு.க.வினர். ஜெயலலிதாவின் அரசியல் வாழ்க்கைக்கு, ஆணவத்துக்கு விழுந்த முதல் அடி டான்சி வழக்கு!

...தொடரும்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131